# சுக்சு திபெத்தியர்கள் (Tibetans, Zhugqu)




**Population in China:**
29,500 (1987)
38,300 (2000)
47,300 (2010)
**Location:** Gansu
**Religion:** Polytheism
**Christians:** None Known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Zhugqu, Hbrugchu, Zhouqu Tibetan, Chou-ch'ua Tibetan, Brugchu

**மக்கள்தொகை:** 29,500 (1987 LAC);

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய,போதிக், போதிஷ் திபெத்திய, வட திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 0

**மதம்:** பல தெய்வ வழிபாடு, திபெத்திய புத்தமதம், ஆன்மவாதம், பொன்

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை


**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** CDA01; KHG05

**கிறிஸ்துவத்தின் நிலை**




**வசிப்பிடம்:** கன்சு மாநிலத்தின் கன்னான் (Gannan) மாகாணத்திலுள்ள சுக்சு மாவட்டத்தில் 38,000 சுக்சு திபெத்தியர்கள் வாழ்கின்றார்கள். சீனாவில் வாழும் திபெத்தியர்கள் மத்தியில் கிழக்கு திசையின் முனையில் வாழ்பவர்கள் இவர்களே. பைலோங் (Bailong) நதி மலைப்பாங்கான சுக்சு மாவட்டத்தின் வழியாகப் பாய்கிறது.

**அடையாளம்:** சுக்சு திபெத்தியர்கள் அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்; ஆனால் கன்சுவில் வாழும் பைமா மற்றும் போயு திபெத்தியர்களைப்போல் இவர்களும் மொழியியல்சார் மானிடவியலின்படி சொந்த மொழியையும் வழக்கங்களையும் கொண்ட ஒரு தனி இனமாவார்கள்.

**மொழி:** தெற்கில் உள்ள கம்பா மொழிவகைகளிலிருந்து சுக்சு மொழி வேறுபட்டாலும் இதுவும் ஒருவகைக் கம்பா மொழியேயாகும். சொனி மற்றும் சுக்சு மொழிகள் கம்பா மொழியின் வகைகள் எனப்பட்டாலும் சுக்சு திபெத்தியர்கள் தங்கள் அருகாமையிலுள்ள சொனி திபெத்தியர்களின் மொழியைப் புரிந்துகொள்ள முடிவதில்லை.

**வரலாறு:** சுக்சு திபெத்தியர்களுக்கு நீண்ட வரலாறுண்டு. ஒரு சீன எழுத்தாளர் இவ்வாறு குறிப்பிடுகிறார் "இவர்களுடைய மூதாதையர்கள் யுத்தத்திற்குப் பயந்து (சொங் (Song) ராஜவம்சம், கி.பி.1127-கி.பி.1279) தப்பியோடி முடிவாக இப்பகுதிகளில் குடியேறி இனப்பெருக்கம் அடைந்துள்ளனர்."

**பழக்கவழக்கங்கள்:** சுக்சு மக்களுடைய வீடுகள் மண், கல் மற்றும் மரத்தைக்கொண்டு கட்டப்பட்ட ஓர் அடுக்கு வீடுகளாகும். சமமான நிலப்பகுதிகளுக்களின் பற்றாக்குறைகள் காரணமாக "கிட்டத்தட்ட ஒவ்வொரு வீட்டிற்கு முன்னும் ஒரு தட்டையான மேடை உள்ளது. இதற்கு அநேகப் பயன்பாடுகளுள்ளன. வீடுகள் சரிவான நிலத்தில் கட்டப்பட்டுள்ளத்தால், சிலர் தங்களுடைய சொந்த வீட்டிலிருந்து வெளியே வரும்போது உண்மையில் அண்டை வீட்டின் கூரையின்மேல் நிற்கிறார்கள்."

ஒவ்வொரு திங்களாண்டின் ஐந்தாவது மாதத்தில் திபெத்திய ஆண்கள் அம்பு நடும் விழாவைக் கொண்டாடுகிறார்கள். இதில் பெண்கள் பங்குபெற அனுமதியில்லை. மதிப்பிற்குரிய ஒரு முதியவர் இந்தச் சடங்கை நடத்துகிறார். "ஒவ்வொருவரும் வறுத்த மாவு, வெண்ணெய், வாற்கோதுமை மற்றும் தேயிலை ஆகியவற்றைக் குவிக்கப்பட்ட சைப்ரஸ் மரக்கிளைகள்மேல் வைக்கிறார்கள், பின்பு அதில் நெருப்பிட்டு அதை மலைக் கடவுளுக்குக் காணிக்கையாக்குகிறார்கள். இதற்குப்பின் ஆண்கள் குதிரையேறி மலையின் உச்சிக்குச் சென்று அம்பை நட்டு அதன் அருகில் ஜெபக்கொடிகளையும் நடுகிறார்கள்." இந்தத் திருவிழாவின் ஆரம்பத்தைப்பற்றிக் கூறும் அநேகக் கதைகள் உண்டு,



அதில் ஒன்று இவ்வாறு கூறுகிறது, "ஒரு மதிப்பிற்குரிய மனிதன் இருந்தான். அவனது மரணத்திற்குப்பின் கடவுள்கள் அவனைச் சொர்க்கத்தில் சேர்த்துக்கொள்ளத் தகுதியில்லாத கெட்டவனாகவும் அதேநேரத்தில் நரகத்திற்கு அனுப்ப முடியாத அளவிற்கு நல்லவனாகவும் கண்டு அவனை விட்டுவிட்டனர். அதினால் அவன் பூமியிலேயே தங்கி அதிகப் பொல்லாப்பு செய்துகொண்டும் மக்களுடைய சமாதானத்தைக் கெடுத்துக் கொண்டுமிருந்தான். முடிவாக ஒரு வாழும் புத்தர் (Living Buddha) அவன்மேல் இரக்கம் கொண்டு அவனை மலைமேல் தங்கவைத்து தீமையை விட்டு நன்மை செய்ய வழிநடத்தினார்."

**மதம்:** சுக்சு திபெத்தியர்கள் பல தெய்வ நம்பிக்கையுடையவர்கள். புத்த மதத்திற்கு முன் இவர்கள் பின்பற்றிய பொன் மதம் மலைகளெல்லாம் புனிதமானது என்ற நம்பிக்கையை உடையது. உயர்ந்த மலைகளில் சக்திவாய்ந்த பூதங்கள் வசிப்பதாக இவர்கள் நம்புகின்றார்கள். "சமாதானம், பாதுகாப்பு, செழிப்பான கால்நடைகள் மற்றும் திரளான அறுவடை போன்ற தங்களுடைய விருப்பங்களை நிறைவேற்ற மலைத் தெய்வங்களை வேண்டிக்கொள்கிறார்கள்."

**கிறிஸ்துவம்:** சுக்சு திபெத்தியர்கள் ஒரு சந்திக்கப்படாத இனமாகும். இந்த இனத்தின் சிலருக்கு மட்டுமே கிறிஸ்துவம் என்று ஒன்று உண்டு எனத் தெரியும். இப்பகுதியில் எந்த ஒரு கிறிஸ்துவச் சமுதாயமுமில்லை, மற்றும் இவர்கள் வரலாறு முழுவதும் இவர்கள் மத்தியில் மிஷன் பணி செய்யப்பட்டதாகக் காட்டும் எந்த ஓர் ஆவணமுமில்லை.